KK11T

கன்னியாகுமரி மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 11

காலஅளவு: 3.00 மணிநேரம் **பொதுத் தமிழ்** மதிப்பெண்கள்: 90

பகுதி - I

1. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **14×1=14**
2. **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) 2011 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் பரிசினைப் பெற்ற இந்திரனின் நூல் எது?
அ) நவீன ஓவியம் ஆ) தமிழ் அழகியல்
இ) சாம்பல் வார்த்தைகள் ஈ) பறறைவகள் ஒரு வேளை தூங்கப் போயிருக்கலாம்

2) மொழிமுதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்கவும்
அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

3) யார் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார்
அ) நந்திவர்மன் ஆ) சீயகங்கன்
இ) குலோத்துங்கன் ஈ) மகேந்திரவர்மன்

4) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை
அ) மதிப்புக்கூட்டுப்பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்
அ) அ மட்டும் சரி ஆ) ஆ மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) அ தவறு, ஆ- சரி

5) 'ஈறுபோதல் இடைஉகரம் இய்யாதல்....' எனவரும் இந்நூற்பா எவ்வகை புணர்ச்சி விதிக்குரியது
அ) குற்றியலுகரப் புணர்ச்சி ஆ) முற்றிய லுகரப் புணர்ச்சி
இ) பண்புப் பெயர் புணர்ச்சி ஈ) மகர ஈற்றுப் புணர்ச்சி

6) சிற்றிலக்கியங்கள் ............ வகைப்படும்
அ) 86 ஆ) 96 இ) 106 ஈ) 66

7) முல்லைத் திணைப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர்
அ) கபிலர் ஆ) ஓரம்போகியார் இ) அம்மூவனார் ஈ) பேயனார்

8) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
இ) முருகன் ஈ) பாரதியார்

9) தமிழரின் வாழ்வியல் கருவூலமாக விளங்கும்நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பரிபாடல் ஈ) குறுந்தொகை

10) 'வாடிவாசல்' - என்ற புதினத்தின் உட்கரு எதைப் பற்றியது
அ) தீண்டாமை ஒழிப்பு ஆ) பெண்சிசுக்கொலை
இ) ஏறு தழுவுதல் ஈ) தொழிலாளர் ஒற்றுமை

11) நமக்குக் கிடைக்கும் தமிழ்நூல்களில் காலத்தால் பழமையான இலக்கண நூல்
அ) அகத்தியம் ஆ) நேமிநாதம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

12) கல்வி கற்பிக்கப்படும் இடங்களை 'பள்ளி' என்று ............... நூல் குறிப்பிடுகிறது
அ) சீவக சிந்தாமணி ஆ) பெரிய திருமொழி இ) நிகண்டு ஈ) நன்னூல்

13) திருக்குறளின் சிறப்பினை விளக்கப் புலவர் பலர் பாடிய நூலின் பெயர்
அ) உலகப் பொதுமறை ஆ) குறள் வெண்பா
இ) உத்தர வேதம் ஈ) திருவள்ளுவமாலை

14) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

OTON MI 10T PRO



## பகுதி - II

### பிரிவு - 1

3×2=6

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

15) 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

16) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

17) தமிழர்கள் புகழ் - பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

18) சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

### பிரிவு - 2

2×2=4

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

19) பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

20) உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக

21) சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

### பிரிவு - 3

7×2=14

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.

22) மொழி இறுதி எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக**

அ) வைத்தார் ஆ) பதிப்பித்தார்

24) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக

அ) இயைவதாயினும் ஆ) பூஞ்சோலை

25) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக**

பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள் தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறை கல்வியையும் பெறுதலே முறையான தென்றும், அத்தகைய் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்

26) **கலைச் சொல்லாக்குக**

அ) Earth Environment ஆ) Cultural Elements

27) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

தங்கை (அல்லது) அறிவில்லாதவன்

28) **பேச்சு வழக்கை எழுத்து வழக்கமாக மாற்றுக.**

தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்

29) வேர்ச்சொற்களை தொடர்களாக மாற்றுக.

அ) பேசு ஆ) தா

30) **பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க**

அ) சந்தோஷம் ஆ) விசா

## பகுதி - III

### பிரிவு - 1

2×4=8

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

31) நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32) தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக

33) 'ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்'
இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையை குறள்வழி நின்று கூறுக.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

SHOT ON MI 10T PRO



பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2×4=8

35) 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக

36) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக

37) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

38) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3×4=12

39) சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

(அல்லது)

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40) பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக் கருத்து அணிநயம், சந்த நயம், தொடைநயங்களை எடுத்து எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைத் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

- பாரதியார்

41) பொதுவியல் இணையை சான்றுடன் விளக்குக.

(அல்லது)

பொருண்மொழிக்காஞ்சித் துறையை சான்றுடன் விளக்குக.

42) தமிழாக்கம் தருக.

1) The pen is mightier than the sword
2) Knowledge rules the World
3) Looking at beauty in the world is the first step of purifying the mind
4) A nation's culture resides in the hearts and in the soul of its people

43) கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக.

மாதாந்திர தமிழ்க்கூடல் நிகழ்ச்சி நிரல்

நேரம் 2.00 மணி பிற்பகல், இடம் அரசு மேல்நிலைப்பள்ளி

2.00 மணி - தமிழ்த்தாய் வாழ்த்து
2.05 மணி - வரவேற்புரை - மாணவர். இனியன்
2.10 மணி - தலைமையுரை - தலைமையாசிரியர்
2.20 மணி - சிறப்புரை - நாஞ்சில் நாடன் - எழுத்தாளர்
பொருள் - தமிழ் என்னுயிர் என்பேன்
3.00 மணி - நன்றியுரை - மாணவி தமிழினி
3.10 மணி - நாட்டுப்பண்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com